


புத்தகத்தை இரவல் வாங்கியதும் தன் நண்பன் இளங்கோவின் அருகில் வந்தமர்ந்தாள் மாலா. அந்த நூலகமே அமைதியாக இருந்த போதிலும் அவளின் மனம் அமைதியிழந்திருந்தது.

நீண்ட நேரமாகியும் மாலா தன் கையோடு கொண்டு வந்த புத்தகத்தைப் படிக்காமல் புறட்டியப்படி இருந்தாள்.

இளங்கோவிற்கு மாலாவின் செயல் புரியாதப் புதிராகவே இருந்தது. நூலகத்தின் மேசையில் அவனின் புத்தகத்தைக் கிடத்தி விட்டு மாலாவையே உற்று நோக்கினான். வாடிய மலர்களைப் போல் கலையிழந்திருந்தது அவளின் முகம்.

"மாலா உனக்கு என்னாச்சி?" என வினவினான் இளங்கோ.

"அம்மாவை நினைத்தால் கவலையாக இருக்கிறது. என்னால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை!" என சொல்லும் போதே அவளின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. தன் மனதில் புதைந்திருந்த துன்பத்தைத் கொட்டித் தீர்த்தாள் மாலா.

மாலாவின் கதையைக் கேட்ட இளங்கோவிற்கும் மனம் கனத்தது .அவனால் மாலாவுக்கு ஆறுதல் கூட கூற இயலாமல் தவித்தான்.

"பாவம் மாலா, இவளுக்கு எப்படி உதவி செய்யலாம்?" என்று யோசித்துக் கொண்டே அமர்ந்திருந்தான்.

LIVEWORKSHEETS

அவனது விழிகள் அந்த நூலகத்தில் சஞ்சிகள் அடுக்கப்பட்ட இடத்தில் நின்றிருந்த யாழினியின் மேல் பாய்ந்தது. யாழினி சஞ்சிகை ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள் . சாதனையாளர் கட்டுரையைப் பார்த்த அவள் "நானும் ஒருநாள் நிச்சயம் இவரைப்போல் தேர்ச்சியில் சிறந்த புள்ளிகள் எடுக்க வேண்டும்" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள். யாழினி அப்பள்ளியின் தலைமை மாணவி. கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்த விளங்கும் அவள் ஈகை குணமும் கொண்டவள்.

'இவளால் மட்டுமே மாலாவுக்கு உதவி செய்ய முடியும்,' என்று எண்ணிய இளங்கோ சற்றும் தாமதிக்காமல் யாழினியை நோக்கி நடந்தான்.

மாலாவின் பிரச்சனைகளை யாழினியிடம் எடுத்துரைத்தான் இளங்கோ. ஒரே வீடமைப்புப் பகுதியில் இருக்கும் யாழினி, மாலாவின் குடும்பத்தினர் எதிர்நோக்கும் பிரச்சனையை இவளும் அறிவாள். கணவரை இழந்த மாலாவின் அம்மா, வியாபாரம் பாதிக்கப்பட்டு கடன் தொல்லையால் அவதிப்படுவதைக் கேள்வியுற்றிருக்கிறாள்.

இளங்கோவும் யாழினியும், மாலாவின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வகுப்பாசிரியர் திரு அமுதனைச் சந்தித்தனர்.

அவர், பள்ளி தலைமையாசிரியர் மற்றும் மாணவ நலப் பொறுப்பாசிரியரிடம் கலந்துரையாடி மாலாவின் பிரச்சனைகளுக்குப் பண உதவி கோறுவதாக உத்தரவாதம் தெரிவித்தார். யாழினியின் அக்கறையைக் கண்டுப் பூரித்து போனார் திரு அமுதன்.

இரண்டு வாரத்திற்கு பிறகு மாலாவின் வீட்டிற்கு சமூகநல உறுப்பினர்கள், ஆசிரியர்கள் என்று சிலர் வந்திருந்தனர். பண உதவி மற்றும் பொருள் உதவியும் வழங்கினர். மாலாவும் அவள் அம்மாவும் நிம்மதி பெரு மூச்சு விட்டனர்.




LIVEWORKSHEETS